## முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**24.02.2026**

OS. No. 235/2013

பக்கம் – 4

PW1 – திவ்யராகினி

**முதல் விசாரணை தொடர்ச்சி**

28.08.1994 தேதியிட்ட அடமானப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகும். பிராதுப்படி தீர்பாக பிராத்திக்கிறேன்.

**5ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஐந்தாம் பிரதிவாதியிடம் எவ்வளவு பணம் நிலுவையில் உள்ளது என்ற விவரத்தை காட்ட ஏதாவது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஒன்றாம் பிரதிவாதி என்னுடைய தாயார் ஆவார். இரண்டாம் பிரதிவாதி என்னுடைய தம்பி ஆவார். மூன்றாம் மற்றும் நான்காம் பிரதிவாதிகள் என்னுடைய தங்கை ஆவார்கள். என்னுடைய தந்தை இறக்கும் தருவாயில் இண்டஸ்ட்ரியல் கோ ஆப்பரேட்டிவ் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தினை நான் என்னுடைய தந்தையின் இறப்பு பலன்களை பெறுவதற்காக வேண்டி ஐந்தாம் பிரதிவாதியிடம் கொடுத்த கடிதம் மற்றும் பிரமாண பத்திரம் ஆகும். அந்தப் பிரமாண பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆகும். அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். 17.08.2012 தேதிகிட்ட முதல் பிரதிவாதி ஐந்தாம் பிரதிவாதியிடம் கொடுத்த கடிதத்தில் உள்ள முதல் கையெழுத்தும் என்னுடையதுதான் அந்த கடிதம் பி.வா.சா.ஆ.2 இரண்டாகும். அந்த இரண்டு ஆவணங்களிலும் என்னுடைய தந்தையின் இறப்பு பலன்களை முதல் பிரதிபாதியான என்னுடைய தாயாருக்கு கொடுப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தான் நான் குறிப்பிட்டு கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தில் உள்ள பணம் பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களின் அடிப்படையில் ஒன்றாம் பிரதிவாதியான என்னுடைய தாயாருக்கு ஐந்தாம் பிரதிவாதி கொடுத்துவிட்ட காரணத்தினால் ஐந்தாம் பிரதிவாதிக்கு எதிராக பி அட்டவணை சொத்துக்

குறித்த எந்த ஒரு பரிகாரமும் இந்த வழக்கு மூலம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் அந்த அட்டவணைத்துக்கான பரிகாரம் மட்டும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்